பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

07 12 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட பல்வேறு சவால்களை இந்திய திறம்பட எதிர்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. மக்கள் சேவையை திறம்பட மேற்கொள்வதன் மூலம் அரசின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும் என்று தொலைதொடர்புத்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

3. கோவாவில் இரவு விடுதியில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

4. பாலஸ்தீன அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பான ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட பல்வேறு சவால்களை இந்திய திறம்பட எதிர்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியாவின் தனித்துவம் மிக்க செயல்பாடுகளுக்கு ஆபரேஷன் சிந்தூர் சிறந்த உதாரணமாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளில் உணவு பாதுகாப்பிற்கான அம்சங்கள் முக்கிய அங்கம் வகிப்பதாக அவர் கூறினார்.

நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு புவிசார் அரசியல் தொடர்பான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சீனாவுடன் வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பது தொடர்பான யுனெஸ்கோவின் ஆலோசனைக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர ஷெகாவத், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், முதன்மை விருந்தினராக பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார்.

முதல் முறையாக இந்த ஆலோசனைக் கூட்டத்தை இந்தியா நடத்துகிறது. இந்தக் கூட்டம் இம்மாதம் 8ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

மக்களுக்கு ஆற்றும் சேவைகளை திறம்பட மேற்கொள்வதன் மூலம் அரசின் மீதான அவர்களது நம்பிக்கையை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய தொலைதொடர்புத்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய தொலைத்தொடர்பு கல்வி நிறுவனத்தின் அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்பின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

பயிற்சியை முடித்த அதிகாரிகள் தங்களது பணிகளில் நேர்மையாகவும், அறநெறியுடனும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதிகாரிகள் ஒரு குழுவாக ஒன்றிணைந்து பணியாற்றுவதன் மூலம் அரசு நிறுவனங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த முடியும் என்று திரு. சந்திரசேகர் பெம்மசானி கூறினார்.

<<<<>>>>

கோவாவில் உள்ள இரவு விடுதியில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகா பகுதியில் உள்ள இரவு விடுதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீயை அணைக்கும் பணிகளில் பல்வேறு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டுள்ளதாகவும், மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் அந்த விடுதியின் ஊழியர்களாக இருக்கலாம் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இந்த விபத்து தமக்கு மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக கோவா முதலமைச்சருடன் தொடர்புகொண்டு பேசியதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை கோவா அரசு வழங்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

தில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், ஜார்கண்ட், சத்தீஸ்கட், மத்தியப்பிரதேசம் மற்றும் ஒடிசா மாநிலங்களின் ஓரிரு இடங்களில் கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்திலும் இதே நிலை நீடிக்கும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாலஸ்தீன அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பான ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது.

இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 151 நாடுகளும், எதிராக 10 நாடுகளும் வாக்களித்துள்ளன. 14 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இந்த தீர்மானத்தை ஐ.நா. நிவாரண மற்றும் பணிக்குழு முகமையின் தலைமை ஆணையர் வரவேற்றுள்ளார்.

<<<<>>>>

சூடானில் அந்நாட்டு துணை ராணுவப் படையினர் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 33 குழந்தைகள் உட்பட 50 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு சூடானின் Kalogi-யில் உள்ள Kindergarten பகுதியை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு அந்நாட்டு மனித உரிமைகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சர்வதேச விதிமுறைகளை மீறும் செயல் என்று அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 14 பேர் காயமடைந்தனர்.

Pretoria-வில் இன்று அதிகாலை இந்த துப்பாக்கிச்சூடு நடந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்த நகரத்தில் உள்ள தங்கும் விடுதியில் ஆயுதமேந்திய 3 பேர் இந்த தாக்குதலில் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு தடயவியல் நிபுணர்கள் உள்ளிட்ட சிறப்பு பாதுகாப்புக் குழு வரவழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு காவல்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

துருக்கியில் உஸ்மானியா மாகாணத்தில் உள்ள தேசிய நெஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

Bahce மாவட்டம் அருகே பயணியர்களுடன் சென்ற பேருந்தும் - சரக்கு லாரியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பாக லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த பகுதியில் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா 47 புள்ளி ஐந்து ஓவரில், 270 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

271 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் களமிறங்கிய இந்தியா, 39 புள்ளி ஐந்து ஓவரில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் 2-1 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா தொடரை கைப்பற்றியது.

<<<<>>>>

உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.

தோஹாவில் நேற்று நடைபெற்ற மகளிர் 10 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சுருச்சி சிங் தங்கப்பதக்கத்தையும், சைனியம் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.

<<<<>>>>

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தாவி சர்மா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-18, 21-16, என்ற செட் கணக்கில் ஜப்பானின் ஹினா அகெச்சி-யை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ப்ரித்வி கிருஷ்ணமூர்த்தி - சாய் ப்ரதீக் இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, இந்தோனேசியா இணையை வென்றது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>